A/L 87 Day Class
பிரிவு III
ஆரம்பம்: 10-11-1986
Zoology : 1.30-2.30 p.m
Botany : 2.30-3.30 p.m.
Physics : 3.30-4.30 p.m
Chemistry: 4.30-5.30 p.m.
New Master Institute
B.M.C. Lane, JAFFNA.

Registered as a Newspa...

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை ரூ.1/-

G.C.E. (A/L) 1987
Physics: VARNAM
நடைபெறுகின்றது.
திங்கள், வெள்ளி;
3-4 ELECTRICITY
திங்கள், வெள்ளி:
4-5 MECHANICS
New Master Institute
B.M.C. Lane, JAFFNA.

சுடர்:- 1 யாழ்ப்பாணம் அக்ஷய ஆண்டு ஐப்பசி மீ 24 உ திங்கட்கிழமை ஹிஜ்ரி 1406 ரபியு அவ் பிறை 07 (10-11-1986) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர்:- 303

# புலிகளின் நிபந்தனையை ராணுவம் ஏற்றது



சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த சந்திப்பு. கைதிகள் பரிமாற்றப் பேச்சு என்பவற்றின் பின்னர் ஸ்ரீலங்கா இராணுவக் கப்டன் கொத்தலாவலை, தமிழீழ விடுதலைப் புலிகள் தளபதி கிட்டுவுடன் கை குலுக்கியபடி மக்கள் மத்தியில் பூரித்த சிரிப்புடன் காணப்படுகின்றார். இடது கோடியில் மேஜர் ஆரியரத்தினவும் சிரித்தபடி காணப்படுகிறார்.

## கைதிகள் பரிமாற்றம் இன்று நடைபெறலாம்

— அலுவலகச் செய்தியாளர்கள்: க. இரத்தினராஜசிங்கம், ஜே. பி. இரட்ணதுரை —

யாழ்ப்பாணம், நவ. 10

தமிழீழ விடுதலைப் புலிகளிடம் யுத்தக் கைதிகளாகப் பிடிபட்டிருக்கும் இரண்டு இராணுவச் சிப்பாய்களையும், அவர்களுக்குப் பதிலாக இரண்டு போராளிகளையும் பரிமாற்றம் செய்வதற்கு, புலிகள் விதித்த மூன்று நிபந்தனைகளையும் இராணுவத்தினர் ஏற்றுக்கொண்டனர்.

அதனைத் தொடர்ந்து பரிமாற்றம் அனேகமாக இன்று திங்கட்கிழமை இடம்பெறலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

புலிகள் விதித்த நிபந்தனைகளை ஏற்று கைதிகள் பரிமாற்றம் இடம்பெறும் - இப்படி தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க யாழ் மாவட்டத் தளபதி கிட்டு, நேற்று செய்தியாளர்கள் மத்தியில் தெரிவித்தார்.

கைதிகளின் பரிமாற்றம் குறித்து இராணுவத்தினருக்கும் புலிகளுக்கும் இடையில் நடந்த பேச்சுக்களின் முடிவில், இராணுவத்தினரை கோட்டை முகாமுக்கு வழியனுப்பி வைத்துவிட்டு தளபதி திரு. கிட்டு செய்தியாளர்களைச் சந்தித்தார்.

### அரசே அழைத்தது


அப்போது திரு. கிட்டு சொன்னதாவது:-

கைதிகள் பரிமாற்றத்துக்கான பேச்சுவார்த்தைகளுக்கு ஸ்ரீலங்கா அரசாங்கமே எம்மை முதல் அழைத்தது.

அதற்கு இணங்கவே நாம் இச்சந்திப்பை ஒழுங்கு செய்தோம்.

ஸ்ரீலங்கா இராணுவத்

(4ஆம் பக்கம் பார்க்க)



கைதிகள் பரிமாற்றம் பற்றிப் பேச்சுக்கள் நடத்த யாழ் நகரம் வந்த கோட்டை இராணுவ முகாமைச் சேர்ந்த கோர்ணல் வீரசேகரா, கப்டன் கொத்தலாவலை ஆகியோர் புலிகள் தளபதி கிட்டு, ரகீம் (வாக்கிடோக்கியுடன்) ஆகியோர் மத்தியில் மலர்ந்த முகங்களுடன் காணப்படுகின்றனர்.

## விளையாட்டு வீரர்களையே காண்கிறேன் என்றார் கேர்ணல் வீரசேகரா

யாழ்ப்பாணம், நவ. 10

பயங்கரவாதிகளையல்ல விளையாட்டு வீரர்களையே இங்கே காண்கிறேன்.

இப்படி கேர்ணல் வீரசேகரா கூறினார்.

நேற்று நடைபெற்ற புலிகள் - சிப்பாய்கள் சந்திப்பின்போதே எமது செய்தியாளரிடம் அவர் இவ்வாறு கூறினார்.

போராளிகளைப் பார்க்கும்போது விளையாட்டு வீரர்களைப் பார்ப்பது போன்ற ஒரு பிரமை தமக்கு ஏற்படுவதாகவும், ஒரு விளையாட்டு வீரனுக்குஉரிய 'ஸ்போற்ஸ்மன்சிப்' (Sportsman-ship) எனப்படும் விளையாட்டில் வல்லவனது நற்பண்புகளை தாம்

(4ஆம் பக்கம் பார்க்க)

## விஜேயும் இன்று பங்குபற்றுவாரா?

யாழ்ப்பாணம், நவ. 10

மக்கள் கட்சி பொதுச் செயலாளர் திரு. விஜய குமாரணதுங்காவும் இன்றைய கைதிகள் பரிமாற்றத்தில் பங்குபற்றுவாரா?

குமாரணதுங்காவை இன்றைய சந்திப்பில் கலந்து கொள்ளும்படி அரசு கேட்கவேண்டும் என தாம் இராணுவத்தினரிடம் கூறியதாக கிட்டு தெரிவித்தார்.

விஜய குமாரணதுங்

(4ஆம் பக்கம் பார்க்க)

## இன்று சீட்டிழுப்பு

யாழ்ப்பாணம் நவ. 10

தமிழ் ஈழம் போர் நிதி மாதாந்த அதிஷ்டலாபச் சீட்டிழுப்பு இன்று பிற்பகல் 5-30 மணி அளவில் நல்லூர் கந்தசுவாமி ஆலய மேற்கு வீதியில் நடைபெறும். (இ-10)

## சுபநேரம்

10-11-1986
திங்கட்கிழமை

சுபநேரம்:
12.05 முதல் 1.35 வரை

ராகுகாலம்:
7.35 முதல் 9.05 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

நவமி பிற்பகல் 5. 26வரை

### முச்சந்தி ஜொலி



காலமும் ஒரு நாள் மாறும் எண்டது எவ்வளவு உண்மை பார்த்தியளே. .! சிப்பாய்களைக் கண்டு குடல் நடுங்கின எங்கடை சனம் நேற்று அவைக்குக் கை அசைத்து மகிழ்ச்சி தெரிவிச்சுதுகள் ! !

## போராளிகள்-சிப்பாய்கள் பரிமாற்றத்துக்கு விதிக்கப்பட்ட நிபந்தனைகள் மூன்று

யாழ்ப்பாணம், நவ. 10

சிப்பாய் - போராளிகள் (கைதிகள்) பரிமாற்றத்துக்காக தமிழீழ விடுதலைப் புலிகள் விதித்த நிபந்தனைகள் வருமாறு;

1. நாம் அறிவித்த 10 விடுதலைப் புலிப் போராளிகளையும் முன் கூட்டியே யாழ் கோட்டை முகாமுக்குக் கொண்டுவர வேண்டும்.

2. கைதிகள் பரிமாற்றம் கொழும்பு ஆங்கில தினசரிகளான த ஐலண்ட், சன், லங்கா கார்டியன் ஆசிரியர் மெர்வின் டி சில்வா, பி. பி. சி.செய்தியாளர், கொழும்பில் தற்சமயம் தங்கியுள்ள வெளிநாட்டுச் செய்தியாளர்கள் ஆகியோர் முன்னிலையில் இடம்பெற வேண்டும்.

3. அரசியல் சார்பற்ற மதகுருமார் (கிறிஸ்தவ சமயத்தைச் சேர்ந்தவரோ அல்லது பௌத்த பிக்குவோ) ஒருவராவது இந்நிகழ்ச்சியின்போது இருக்க வேண்டும்.

கொழும்பு, வெளிநாட்டுச் செய்தியாளர், மதகுருமார் இங்குள்ள நிலைமையைப் பார்த்து அறிந்து சிங்கள மக்களுக்கு எம் உண்மை நிலையை எடுத்துக் கூற வேண்டும்.

இவையே நேற்றைய பேச்சுக்களின்போது தமிழீழ விடுதலைப் புலிகள், இராணுவத்தினருக்கு விதித்த நிபந்தனைகள் இவற்றை இராணுவத்தினர் ஏற்றுக்கொண்டுள்ளனர். (அ-எ-5-10)

## ● பேச்சின் ஒரு கட்டத்தில்....

யாழ்ப்பாணம், நவ. 10

கைதிகள் பரிமாற்றம் பற்றி நேற்று தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்க யாழ். மாவட்டத் தளபதி கிட்டுவுடனும் இராணுவ அதிகாரிகளுடனும் நடந்த பேச்சுக்களின் ஒரு கட்டத்தில் ஸ்ரீலங்கா இராணுவக் கேர்ணல் வீரசேகரா:-

''சிப்பாய்கள் இரண்டு பேரையும் நீங்கள் என்னிடம் ஒப்படையுங்கள் நான் நீங்கள் குறிப்பிடும் போராளிகள் இரண்டு பேரையும் உங்களிடம் ஒப்படைப்பேன். இந்த உறுதி மொழியை நம்புங்கள்''

புலிகள் தளபதி கிட்டு;

''கைதிகள் பரிமாற்றம் ஒரே சமயத்தில் இடம் பெற வேண்டும்.''

கேர்ணல் வீரசேகா:

''நான் ஒரு பௌத்தன். 23 ஆண்டுகளாக இராணுவ சேவையில் ஈடுபட்டுள்ளேன். நான் உறுதி மொழியை நிச்சயம் காப்பாற்றுவேன். இல்லாவிடில் யூனிபோர்மை கழற்றிவிட்டுப் போய் விடுவேன்.''

புலிகள் தரப்பில் கைதிகள் பரிமாற்றம் ஒரே சமயத்தில் இடம்பெற வேண்டும் என்று மீண்டும் வலியுறுத்தப்பட்டது. (இ-எ-5-10)

## இப்படியும் நடந்தது

யாழ்ப்பாணம், நவ.10

புலிகளின் ''பரேட்டாசப் மெஷின்கன்'' ஒன்றைக் கப்டன் கொத்தலாவலை வாங்கிப் பார்த்தார்.

தற்போது புலிகளிடம் இருக்கும் நவீனரக ஆயுதங்களில் 'பரேட்டாசப்மெஷின்கன்' ஒன்றாகும்.

இதனை இயக்கிப் பார்த்த கொத்தலாவலை மீண்டும் புலிகளிடம் ஒப்படைத்தார். (இ 10)

## 'விடுதலைப் புலிகள்' பத்திரிகையுடன் கோட்டை திரும்பிய சிப்பாய்கள்!

யாழ்ப்பாணம், நவ 10

காலையில் பேச்சுக்கள் நடத்த கோட்டை முகாமில் இருந்து வெளியே வந்த ஸ்ரீலங்கா இராணுவ அதிகாரிகள், சிப்பாய்கள் ஒவ்வொருவருக்கும் கண்கவர் வர்ணத்தில் அச்சடிக்கப்பட்ட 'விடுதலைப் புலிகள்' சஞ்சிகை கொடுக்கப்பட்டு அவர்கள் புலிகளினால் வழியனுப்பி வைக்கப்பட்டனர்.

கோட்டைக்கு திரும்புவதற்கு முன்னர் நேற்று நண்பகல் அளவில் முதலாம் குறுக்குத் தெருச் சந்தியில் வைத்து ஸ்ரீலங்கா இராணுவத்தினரை தமிழீழ விடுதலைப் புலிகள் வழியனுப்பி வைத்தனர்.

கேர்ணல் வீரசேகரா, கப்டன் கொத்தலாவலை உட்பட சகல இராணுவத்தினருக்கும் 'விடுதலைப் புலிகள்' சஞ்சிகையின் பிரதிகள் கொடுக்கப்பட்டன.

கோட்டைக்குத் திரும்பும் முன்னர் கப்டன் கொத்தலாவலை, தமிழீழ விடுதலைப் புலிகள் தளபதி கிட்டு, ரகீம், ரவி ஆகியோரைப் பெயர் சொல்லி அழைத்து 'வருகிறேன்' என்று கூறினார்.

பத்துச் சிப்பாய்களும் வீதியின் இரு மருங்கி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தாவீது -- கோலியாத்

யாழ்ப்பாணம், நவ .10

புலிகளின் தளபதி கிட்டுவையும்; கப்டன் கொத்தலாவலையையும் பார்க்கும்போது பைபிளில் வரும் தாவீது; கோலியாத் கதையே ஞாபகம் வருகிறது என்று கேர்ணல் வீரசேகரா கூறினார்.

நேற்று போராளிகள், இராணுவத்தினர் சந்திப்பின் இறுதியில்; கிட்டுவும் கொத்தலாவலையும் பத்திரிகையாளருக்காக அருகருகே நின்று படம் எடுத்துக் கொண்டபோதே கொத்தலாவலையின் பிரமாண்டமான உருவத்தை கோலியாத்துடன் கேர்ணல் வீரசேகரா ஒப்பிட்டுக் கூறினார். (இ - 5)

## புலிகள் கண்ணிவெடி: கவச வாகனம் சிதறியது

யாழ்ப்பாணம், நவ. 10

மன்னார் மதவாச்சி வீதியில் புளியங்குளம் பெரிய கட்டு பகுதியால் ரோந்து வந்த சிப்பாய்களை நோக்கி நேற்று விடுதலைப் புலிகள் கண்ணிவெடித் தாக்குதல் நடத்தினர்.

இதனால் சிப்பாய்களின் கவச வாகனம் ஒன்று சிதறியது.

இதில் பயணம் செய்த அனைத்துச் சிப்பாய்களும் கொல்லப்பட்டனர் என்று புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

மெனிக்பாம் முகாமில் இருந்து ஆலங்குளம், செட்டிகுளம் நோக்கிச் சிப்பாய்களுடன் சென்ற கவசவாகனமே தமது கண்ணி வெடியில் சிக்கியது என்று புலிகள் தெரிவித்தனர். (இ-10)

★ ஒரு மாதத்தில் 2ஆவது வரலாற்றுச் சம்பவம்

★ அதனைப் பார்க்க ஏராளம் மக்கள்

## இராணுவ அதிகாரிகள் -- புலிகள் ஒரு மணிநேரம் பேச்சுவார்த்தை

### போராளிகள் பாதுகாப்பு வழங்கினர்

யாழ்ப்பாணம், நவம்பர் 10

எதிரிகளான ஸ்ரீலங்கா இராணுவத்தினரும், தமிழீழ விடுதலைப் புலிகளும் நேற்று நண்பர்கள் போல அன்னியோன்யமாக நிராயுதபாணிகளாக மலர்ந்த முகங்களுடன் சந்தித்துப் பேச்சுவார்த்தைகள் நடத்தினார்கள்.

போராளிகளின் கோட்டையாக விளங்கும் யாழ் நகருக்குள் வந்த இராணுவத்தினருக்கு ஆயுதம் தாங்கிய புலிகள் பாதுகாப்பு வழங்கினர் இராணுவத்தினரைப் பவனியாக அழைத்தும் சென்றனர்.

காலத்தால் அழியாத இந்த வரலாற்று வரவேற்பையும், நட்புறவுக் காட்சிகளையும் பார்ப்பதற்காக ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டிருந்தனர்.

கைதிகளாக உள்ள இரண்டு இராணுவத்தினரையும், இரண்டு விடுதலைப் புலிகளையும் பரிமாறிக் கொள்வது குறித்தே தமிழீழ விடுதலைப் புலிகள் யாழ் மாவட்ட உயர்மட்ட பிரமுகர்களுக்கும், இராணுவ உயர் அதிகாரிகளுக்கும் இடையில் பேச்சுவார்த்தை நடந்தது.

சம்பவங்களின் நேற்றைய முதற்கட்டத்தை தொகுத்து அடுக்கிக் கீழே தருகிறோம் படியுங்கள்:

நேற்றுக் காலை சுமார் 9. 15 மணியளவில் விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்டத் தளபதி திரு. கிட்டு தமது சகாக்களுடன் பிரதான வீதி- முதலாம் குறுக்குத் தெரு சந்தியில் காத்திருந்தார்.

அப்போது கோட்டையிலிருந்து ஒரு பொலீஸ்காரர் சிவில் உடையில் சைக்கிளில் வந்தார். அவர் கைதிகள் பரிமாற்றம் பற்றிய பேச்சுவார்த்தைக்கு ஆயத்தமாக நிற்கிறீர்களா? என கிட்டு குழுவினரிடம் வினவினார். போராளிகள் தரப்பில் ரகீம் ஆம் என்று பதிலளித்தார். சைக்கிளில் வந்த பொலீஸ் திரும்பி கோட்டைக்குச் சென்றார்.

புலிகளின் பிரமுகர் ரகீம், ஒருசில போராளிகள், படப்பிடிப்பாளர்கள்,பத்திரிகையாளர்கள் கோட்டையை நோக்கிச்சென்று வாடி வீட்டுச் சந்தியில் நின்றனர்.

சுமார் 9. 30 மணி அளவில் பொலீஸ் நிலையப் பக்கமிருந்து ''ரெடியா'' என ஒரு அனாமதேயக் குரல் கேட்டது.

ரகீம் இங்கிருந்தபடி ''நாம் தயாராக உள்ளோம்'' எனப் பதில் குரல் கொடுத்தார்.

அதைத் தொடர்ந்து கோட்டைப் பக்கமிருந்து இராணுவச் சீருடையில் கப்டன் கொத்தலாவலையும், கேர்ணல் வீரசேகராவும், மேஜர் ஆரிய

(4ஆம் பக்கம் பார்க்க)

## பூவரசங்குளம் மோதலில் ஈ. பி. ஆர். எல். எப். போராளிகள் வீர மரணம்

யாழ்ப்பாணம், நவ.10

நேற்றுக் காலை வவுனியா பூவரசங்குளம் பகுதியில் சிப்பாய்களுக்கும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினருக்கும் இடையில் நடந்த நேரடி மோதலில் ஆறு ஈ.பி.ஆர்.எல்.எவ் போராளிகள் வீர மரணமடைந்தனர்.

இது சம்பந்தமாக ஈ. பி. ஆர். எல். எவ் விடுத்துள்ள அறிக்கையின் விவரம் வருமாறு:-

நேற்றுக்காலை ஏழுமணி அளவில் பூவரசங்குளத்தில் இராணுவத்தினருடனான நேரடி மோதலில் தோழர்கள் வரதன், ஈசன், வேணு, கோபி, ராமு, சங்கர் ஆகியோர் வீர மரணமடைந்தனர்.

அவர்களுக்கு நாம் எமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

எதிரிக்கு எதிராக விட்டுக் கொடாத விடுதலை யுத்தத்தை நடத்தி வீரமரணமடைந்த தோழர்கள் விட்டுச் சென்ற பணியைத் தொடர்வோம் என உறுதி கொள்வோம்.

இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. (இ-10)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**TOEFL**

வெளிநாட்டுக் கல்லூரிகளிலும், பல்கலைக் கழகங்களிலும் மேற்படிப்பைத் தொடர விரும்புவோருக்கும் அந்நாடுகளில் வேலை வாய்ப்புக்களை எதிர்பார்ப்பவர்களுக்கும் TOEFL பரீட்சையில் திறமைச் சித்தி அவசியம்

Full Course Fees 250/-

Duration — 2 Months

**SPOKEN ENGLISH**

English is caught rather than taught and ... ... ... ... the best way of ... ... ... ... learning English is to speak it

Full Course Fees Rs. 100/- only

Duration — 2 Months

வெளிநாடு செல்பவர்களுக்கோர் வரப்பிரசாதம் விரிவுரைகள்:

பிரபல ஆங்கில விரிவுரையாளர்:

**கந்தையா நவரேந்திரன்**

Both Classes will be held during weekends

வகுப்புகள் பாதுகாப்பான இடத்தில்

(Commencement 15-11-86)

**CANTABIA INSTITUTE**

21, Main Street,
JAFFNA.

T. Phone; 24201

**பிரயாண ஒழுங்குகள்**

● டென்மார்க் ● ஜேர்மனி

● சவூதி அரேபியா

டென்மார்க், ஜேர்மனி ஆகிய நாடுகளுக்கு செல்ல விரும்புவோரை எமது முகவர் நேரடியாக அழைத்துச் செல்வார். இம் மாதம் 15ம் திகதி செல்லவுள்ள பயணத்தில் பதிவு செய்தோரும் செல்ல விரும்புவோரும் உடன் தொடர்பு கொள்ளவும்.

சவூதி அரேபியாவுக்கு கட்டிட பகுதி Laboures ஆக செல்ல விரும்புவோர் 14ம் திகதிக்கு முன்பதாக பாஸ்போட், 6 படம் ஆகியவற்றுடன் உடன் தொடர்பு கொள்ளவும்

குவைத்திற்கு பாஸ்போட் கொடுத்தவர்கள் 15ஆம் திகதிக்கு முன் தொடர் கொள்ளவும்.

தொடர்பு:

**N.பாலா**

திருச்செல்வம் வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

✱ தீவுப்பகுதி மக்களின் நலன் கருதி ஓமேகா ரவல்ஸ்&ரூர்ஸ் வங்களாவடி சந்தியில் நிறுவப் பட்டுள்ளது

■ எமது கிளை நிறுவனம் ஓமேகா ரவல்ஸ் & ரூர்ஸ் எனும் பெயரில் குப்பிளான் சந்தியிலும் நிறுவப்பட்டுள்ளது.

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

நிறுவனங்களில்

# தமிழர் தமிழில் கடமை ஆற்ற வேண்டும்

## முன்னாள் விரிவுரையாளர் கூறுகிறார்

வட்டுக்கோட்டை, நவ. 10

அரசாங்க நிறுவனங்களிலும் தனியார் நிறுவனங்களிலும் கடமையாற்றுகின்ற தமிழ் உத்தியோகத்தர்கள் தமிழிலேயே தமது கருமங்களைச் செய்யவேண்டும். அப்போதுதான் தமிழர்களுக்கு வேலைவாய்ப்புகள் ஏற்படும். தமிழர்கள் தமிழில் தமது கடமைகளைச் செய்யாமையாலேயே தமிழ் தட்டெழுத்தாளர்கள், சுருக்கெழுத்தாளர்களது தேவை ஏற்படாதிருக்கின்றது.

அராலி மாதர் தட்டெழுத்து சுருக்கெழுத்தாளர் பயிற்சி நிலையத்தைத் திறந்து வைத்து உரை நிகழ்த்திய அரச தொழில் நுட்பக் கல்லூரி முன்னாள் விரிவுரையாளர் திரு. சி. இராமலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

முன்னாள் கிராமோதய சபைத்தலைவரும் அராலி பாம்பாய் வெங்காய உற்பத்தியாளர் சங்கத் தலைவருமான திரு. நா. குகராசா தலைமையில் இவ்வைபவம் நடைபெற்றது

திரு. சி இராமலிங்கம் தொடர்ந்து உரையாற்றும் போது கூறியதாவது –

தமிழர் உரிமை பெறத் துடித்துக் கொண்டிருக்கும் இக்காலகட்டத்தில் தமிழர்களாகிய நாம் தமிழுக்கு முக்கியத்துவம் கொடுக்கப் பின்நிற்கிறோம். தமிழர்கள் தமிழில் கடமை செய்தல் வேண்டும். அப்போது தான் தமிழ் தட்டெழுத்தாளர்கள், சுருக்கெழுத்தாளர்களது தேவை அதிகரிக்கும். தமிழர்களுக்கு வேலை வாய்ப்பும் ஏற்படும்.

இப்படி அவர் கூறினார்.

அராலி வடக்கு மேற்கு வி சட சேவை அலுவலர் திரு ந சந்திரசேகரர் பிள்ளை உரையாற்றும் போது, தட்டெழுத்து, சுருக்கெழுத்துத் துறையிலே திரு. இராமலிங்கம் மிகப் பிரபல்யமும் திறமையும் வாய்ந்தவர். எமது இளைஞர்களும் யுவதிகளும் அவரை நன்றாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

கற்பித்தல் துறையிலே அனுபவமும் ஆற்றலும் மிக்க இவர் எமக்குக் கிடைத்திருப்பது நாம் செய்த பெரும் பாக்கியமாகும்'' என்றார்

(இ-161)

## செய்திக்கொத்து

### கை கலப்பு

கிளிநொச்சி, நவ. 10

கிளிநொச்சி வட்டக்கச்சியில் உள்ள பாடசாலை ஒன்றில் இடம்பெற்ற பெற்றோர் ஆசிரியர்சங்கப் பொதுக் கூட்டம் ஒன்றில் பழைய நிர்வாகத்தினருக்கும்– புதிய நிர்வாகத்தினருக்கும் இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் ஈற்றில் கைகலப்பாக மாறியதாகத்தெரிவிக்கப்படுகிறது.

பாடசாலையின் எல்லையில் நிர்மாணிக்கப்படும் கோயில் பிரச்சினை காரணமாகவே பழைய- புதிய நிர்வாகத்தினருக்கிடையில் கைகலப்பு ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது. (இ-76)

### விதைதானியம் விநியோகம்

கிளிநொச்சி, நவ. 10

கிளிநொச்சி விவசாயிகளின் தேவையை முன்னிட்டு தென் பகுதியில் இருந்து கொண்டுவரப்பட்ட பி ஜி. 34-6விதை நெல், ஏனையரக மிளகாய்விதை, குரக்கன், பயறு, உழுந்து, எள்ளு, சோயா மற்றும் ஏனைய விதைதானியம் வட்டக்கச்சி விவசாயப் பண்ணையில் உள்ள உதவி விவசாய விரிவாக்க அலுவலகத்தில் தற்போது விநியோகிக்கப்படுகிறது.

இவற்றைப் பெற்றுக் கொள்ள விரும்பும் விவசாயிகள் காலம் தாழ்த்தாது உடன் பெற்றுக் கொள்ளுமாறு உதவி விவசாயப் பணிப்பாளர் திரு. ச. த. பத்மநாதன் தெரிவித்துள்ளார்,

(இ-76)

# மரம் நடும் விழா தமிழ் மண்ணுக்கு புதிதல்ல

## கனகராஜா கூறுகிறார்

யாழ்ப்பாணம், நவ. 10

மரம் நடும் விழா தமிழ் மண்ணுக்கு புதிது அல்ல' பண்டு தொட்டு நமது முன்னோர் மரங்களை நட்டு குளங்களை அமைத்து நீரைத் தேக்கி கிராமங்களைச் செழிப்புறச் செய்தனர்.

இப்படி பிரபல தொழில் அதிபர் சிவதர்ம வள்ளல் திரு. கனகராஜா சொன்னார்.

தெல்லிப்பளை சைவப் பிரகாச வித்தியாசாலையில் அண்மையில் மரம் நடும் வைபவம் இடம் பெற்றது.

திரு. கனகராஜா மரக்கன்றுகளை பாடசாலைக்கு வழங்கினார்.

அதைத் தொடர்ந்து வித்தியாசாலை அதிபர் திரு. ச. வேலாயுத பிள்ளை தலைமையில் நடைபெற்ற விழாவில் பேசுகையிலேயே திரு. கனகராஜா முன்கண்டவாறு சொன்னார்.

அண்ணா கோப்பித் தொழிற்சாலை திரு. நடராசாவும் விழாவிற் கலந்து கொண்டார்.

ஆசிரியர் திரு. மு. சிவதாஸன் நன்றி சொன்னார். (இ–எ)

### ஆசிரியர் சேவை காலப் பயிற்சி

வேலணை, நவ 10

வேலணை கொத்தணி பாடசாலைகளிலும், வேலணை கல்வி வட்டாரப் பாடசாலைகளிலும் 1987இல் ஆண்டு மூன்றில் கல்வி கற்பிக்கஉள்ள ஆசிரியருக்கான ஐந்து நாள் சேவைகாலப் பயிற்சியும். செயல் அமர்வும் வேலணை சேர். வைத்திலிங்கம் துரைசுவாமி மத்திய மகா வித்தியாலயத்தில்இம்மாதம்12,13,14, 15–16–ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

(இ-167)

# கிளிநொச்சி மோதலில் போராளி வீரமரணம்

யாழ்ப்பாணம், நவ.10

சனி காலை 10 மணி அளவில் கிளிநொச்சி கந்தசாமி கோயில் அருகில் இராணுவத்தினருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே நேரடி மோதல் இடம் பெற்றது.

இம்மோதலில் இராணுவத்துக்கு ஏற்பட்ட சேதங்கள் பற்றிய விவரங்கள் தெரியவில்லை.

புலிகள் தரப்பில் தண்ணீரூற்று முள்ளியவளையைச் சேர்ந்த சங்கரலிங்கம் இதயகுமார் (ஜான் 2 ஆவது லெப்டினன்ட்) வீரமரணம் அடைந்தார்.

அவருக்கு வீரவணக்கத்தைத் தெரிவித்து தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

(இ–எ)

# அக்டோபரில் 112குடிமக்கள் மரணம்

யாழ்ப்பாணம், நவ. 10

கடந்த அக்டோபரில் 112 தமிழ் பொதுமக்கள் உயிரிழந்தனர் என்று பிரசைகள் இணைப்புக் கமிட்டி அமைப்பாளர் திரு. எஸ் சிவானந்தராசா அறிவித்திருக்கின்றார்.

அதன் விவரம் வருமாறு:

| | |
|---|---|
| மட்டக்களப்பு— | 36 |
| திருகோணமலை | 08 |
| முல்லைத்தீவு | 10 |
| யாழ்ப்பாணம் | 30 |
| மன்னார் | 20 |
| வவுனியா | 05 |
| கிளிநொச்சி | 02 |
| ஏனையமாவட்டங்கள் | 01 |

(இ–எ)

# 'எயிட்ஸ்' நோயாளி தடுத்து வைப்பு

கொழும்பு, நவ. 10

'எயிட்ஸ்' நோயுடன் கொழும்பு வந்த பிரிட்டிஷ் பிரசை ஒருவர், திருப்பி அனுப்பப்படுவதற்காக தனியார் ஆஸ்பத்திரி ஒன்றில் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்.

தனியார் ஆஸ்பத்திரி ஒன்றில் சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்டிருந்த சமயத்தில்தான் அவருக்கு 'எய்ட்ஸ்' நோய் பீடித்திருப்பதை உள்ளூர் டாக்டர்கள் கண்டு பிடித்தனர்.

பிரிட்டனில் உள்ள அவரின் குடும்ப டாக்டருடன் தொடர்பு கொண்டபோது, அவருக்கு ஏற்கனவே 'எய்ட்ஸ்' இருந்தது என்றும் அந்த நோயுடனே அவர் இலங்கை வந்தார் என்பதும் தெரியவந்தது. (இ–எ)

# வலைபந்தாட்டம்: 14 கல்லூரிகள் இன்று மோதுகின்றன

யாழ்ப்பாணம், நவ.10

மாணவர் முன்னணி நடத்தும் பாடசாலைகளுக்கிடையிலான பெண்களுக்கான மாபெரும் வலைபந் தாட்டப் போட்டிகள் இன்று திங்கட்கிழமையும் நாளை செவ்வாய்க்கிழமையும் நடைபெறுகின்றன

இன்று 'ஆ' பிரிவில் போட்டிகள் நடைபெறும்

நாளை 'அ' பிரிவில் போட்டிகள் நடைபெறும்.

'ஆ' பிரிவில் இன்று நடைபெறும் போட்டிகளில் திருக்குடும்ப கன்னியர் மடம் (ஆங்கிலம்) இராமநாதன் கல்லூரி, மானிப்பாய் மகளிர் கல்லூரி சாவகச்சேரி மகளிர் கல்லூரி, நெல்லியடி ம. ம. வித்தியாலயம், கொக்குவில் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணக் கல்லூரி, இளவாலை கொன்வென்ற், நடேஸ்வராக் கல்லூரி சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி, மகாஜனக் கல்லூரி, கனகரத்தினம் ம. ம. வித்தியாலயம், வட்டு இந்துக் கல்லூரி, உடுவில் மகளிர் கல்லூரி ஆகியவை கலந்து கொள்கின்றன

ஒரே நேரத்தில் மூன்று இடங்களில் போட்டிகள் நடைபெறும்.

காலை 8.30 முதல்9.15 வரையிலான முதலாவது போட்டிகளில் இராமநாதன் கல்லூரிக்கு எதிராக மானிப்பாய் மகளிர் கல்லூரியும்—

சாவகச்சேரி மகளிர் மகாவித்தியாலயத்துக்கு எதிராக நெல்லியடி ம ம வித்தியாலயமும்—

கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு எதிராக யாழ்ப்பாணக் கல்லூரியும் மோத உள்ளன.

9.30 முதல் 10.15 வரை நடைபெற உள்ள இரண்டாவது போட்டிகளில் இளவாலை கொன்வென்றுக்கு எதிராக நடேஸ்வராக் கல்லூரியும்—

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரிக்கு எதிராக மகாஜனக் கல்லூரியும்—கனகரத்தினம் ம. ம வித்தியாலயத்துக்கு எதிராக வட்டு இந்துக் கல்லூரியும் மோதும்.

காலை 10.30 முதல் 1'. 15 வரை மூன்றுவது போட்டிகளும் 11 15 முதல் 12.00 வரை நான்காவது போட்டிகளும் பின்பு பிற்பகல் 2 00 முதல் 2.45 வரை ஐந்தாவது போட்டியும் நடைபெறும் (இ)

விமானச்சிட்டுக்கள், பாஸ்போர்ட் பொண்ட், விசா, ரெலக்ஸ்

CONFIMATION, RE-CONFIMATION

தொலைபேசிச் சேவை:
23364, 28866

**நிப்பொன் ரெலி ரவல்ஸ்**

2 G ஸ்ரான்லி வீதி,
கஸ்தூரியார் - ஸ்ரான்லி வீதிச் சந்தி,
யாழ்ப்பாணம்.

ஸ்ருடியோ உரிமையாளர்களே! புகைப்படப் பிடிப்பாளர்களே!

உங்கள் கலர்படச்சுருள்கள் எவையானாலும் கம்பியூட்டர் முறையில் 5 நாட்களுக்குள் டெவலப்பிங், பிறின்ரிங் செய்து கொள்ள நாடுங்கள்

**QUICK PHOTO**
தெல்லிப்பளை.

| | |
|---|---|
| AMIL | 5-50 |
| AMILA (Special Print) | 5-75 |
| PHOTO KINA | 5-75 |
| LANKA COLOUR PHOTO | 5-75 |

டெவலப்பிங் இலவசம், ஸ்ருடியோக்கள், வாடிக்கையாளர்களுக்கு விசேட கழிவுண்டு.

✱ ஓடர்கள் நேரில் வந்து பெறப்படும் ✱ தொடர்பு கொள்க.

**QUICK PHOTO**
K. K. S. Road Tellippalai.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதய சங்கற்பம்**

இறைவனை வழிபடுவதன் மூலமாக நல்ல புத்தி கிடைக்கும். நல்ல ஞாபகசக்தி கிடைக்கும். நல்ல அருள் கிடைக்கும்.

— ஆதிசங்கரர்

உதயன்
உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

இல. 15, 2வது ஒழுங்கை
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 24805
22073
10-11-1986 த. பெ. இல. 23

# நல்லெண்ணத்தின் ஆரம்பம் ஆகட்டுமே!

ஈழத்தமிழர்களின் உரிமைப் போராட்ட வரலாற்றில் மற்றொரு சரித்திர சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை— நடைபெற்றிருக்கிறது. யாழ்ப்பாணத்தில் ஒரு மாத காலத்திற்குள் இடம்பெற்ற இரண்டாவது வரலாற்று நிகழ்ச்சி அதுவாகும்.

முதலாவது புறநானூற்றுச் சம்பவம் படைக்கப்பட்டது கடந்த அக்டோபர் மாதம் 14 ஆம் திகதி என்பது எல்லோருக்கும் தெரியும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அன்றைய தினம் கோட்டை இராணுவ முகாமுக்கு முன்பாக வைத்து அடம்பன் யுத்தத்தில் இறந்த ஒன்பது இராணுவச் சிப்பாய்களின் சடலங்களைப் பொறுப்பதிகாரி கப்டன் கொத்தலாவலையிடம் கையளித்திருந்தனர்.

நேற்று நடந்த இரண்டாவது சரித்திர சம்பவம் கோட்டை முகாமின் இரண்டு உயர் அதிகாரிகள் (கப்டன் கொத்தலாவலையும், கேணல் வீரசேகராவும்) போராளிகளின் கோட்டையாக விளங்கும் யாழ்ப்பாண நகரத்துக்கு விஜயம் செய்ததாகும்.

கடந்த மே மாதத்தின் பின்னர் கோட்டை இராணுவத்தினர் முகாமுக்குள் முடங்கிக் கிடக்கிறார்கள். அதற்கு முன்னர் அவர்கள் ஆயுதபாணிகளாக யாழ்ப்பாண நகரத்திற்குள் வந்து நடத்திய அட்டகாசங்களின் வடுக்கள் இன்னும் மறையவில்லை.

ஆனால் நேற்று இரண்டு இராணுவ உயர் அதிகாரிகளும், சிப்பாய்கள் சிலரும் நிராயுதபாணிகளாக புலிகளின் கோட்டைக்கு வந்து போயிருக்கின்றனர். போராளிகளும் நிராயுதபாணிகளாகவே அவர்களைச் சந்தித்திருக்கிறார்கள்.

தமிழ் போராளிகளும் ஸ்ரீலங்கா இராணுவச் சிப்பாய்களும் கடந்த மூன்று வருடங்களுக்கு மேலாக ஜன்ம விரோதிகளாக— பகைவர்களாக— எதிரிகளாக இருப்பவர்கள். ஆனால் அது யுத்தகளத்தில்— போரிடும் நேரத்தில்— மட்டும் தான் என்பதைப் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது முன் உதாரணத்தாலும் பண்பினாலும் உலகத்துக்கு எடுத்துக் காட்டி விட்டார்கள்.

அவர்களது நேரிய அணுகுமுறையில், வஞ்சகமற்ற நடத்தையில் நம்பிக்கை வைத்தே இராணுவ உயர் அதிகாரிகள் இருவரும் யாழ். நகரத்திற்குள் துணிந்து காலடி வைத்திருக்கிறார்கள்.

அந்த நம்பிக்கை வீண் போகாமல் இராணுவ அதிகாரிகளையும், சிப்பாய்களையும் தகுந்த பாதுகாப்புக் கொடுத்து அழைத்துப் பேசித் திரும்ப அனுப்பி வைத்திருக்கிறார்கள்.

புலிகளின் இந்த நற்பண்பும், நேர்மையும் இப்போது இல்லாதுவிடினுங்கூடப் பிந்தியாவது தக்கபயனைக் கொடுக்கும் என நம்பலாம்.

அது அவ்வாறிருக்க —

இரண்டு இராணுவச் சிப்பாய்களை, யுத்தக் கைதிகளை மீட்டு எடுப்பதில் ஸ்ரீலங்கா அரசு படி இறங்கி வந்துவிட்டது என்பதையே நேற்றைய இராணுவ அதிகாரிகள் — புலிகள் சந்திப்பு எடுத்துக் காட்டுகிறது.

நிபந்தனை எதுவும் இல்லாமல் விடுவித்தால் தவிர, வேறு விதத்தில் சிப்பாய்களைச் சிறைமீட்க அரசு இணங்காது என்று அடம்பிடித்தவர் அத்துலத்

ஆனால் தனது அதிகாரிகளைப் புலிகளின் கோட்டைக்குச் சென்று பேச்சுவார்த்தை நடத்த அனுமதித்திருக்கிறார்.

இதனை ஒரு பெரும் திருப்பு முனையாக— அரசின் மனமாற்றமாகக் கொள்ளலாமா? அல்லது தமது காரியத்தைச் செய்து முடிப்பதற்கான சமயோசித தந்திரம் என்று கொள்ளலாமா? பொறுத்திருந்து தான் விடை சொல்லவேண்டும்.

போராளிகளைப் பயங்கரவாதிகள் என வெளி உலகுக்குக் காட்டி வரும் அரசு இராணுவ அதிகாரிகளையே அவர்களுடன் பேச வைத்திருப்பது ஒரு விடயத்தைத் தெளிவுபடுத்துகிறது.

போராளிகளை அரசாங்கம் அங்கீகரித்து விட்டது அவர்களுடன் நேரடியாகச் சமாதானம் பேசவும் தயார் என்பதைப் பூடகமாகக் காட்டிவிட்டது என்பதே அதுவாகும்.

சிப்பாய்களைச் சிறைமீட்கும் விடயத்தோடு மட்டும் அந்த நல்லெண்ணத்தை நிறுத்தாமல், இனப்பிரச்சினைத் தீர்வு நோக்கியும் அதே அணுகு முறையை அரசு கைக்கொள்ள வேண்டும்.

தமிழர்களும் மனிதர்கள். அவர்களது அரசியல் அபிலாஷைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்று அரசு நல்மனதோடு சிந்திக்க வேண்டும்.

போராளிகள் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவம் செய்வதற்குச் சட்டபூர்வ, தார்மீக உரிமையைப் பெற்றவர்கள் என்பதை உணர்ந்து, அவர்களைத் தொடர்ந்து அங்கீகரித்து அவர்களுடன் நல்லெண்ணத்தை வளர்த்துச் சமாதானத்தை உருவாக்க அரசு முன்வரவேண்டும்.

நேற்றைய நிகழ்ச்சி, பெங்களூர் மாநாட்டுக்கு முந்திய நல்லெண்ண அறிகுறியாக அமைந்தால் எல்லோருக்கும் நன்மையே.

# துருப்புகளை நேரடியாக அனுப்பினாலும் எம்மை வெல்லமுடியாது

## நிக்கராகுவா ஜனாதிபதி அமெரிக்காவுக்கு சவால்

மனாகுவா, நவ. 9

கிளர்ச்சிக்காரர்களுக்கு உதவுவதன் மூலம் மட்டும் அல்ல, நேரடியாகத் துருப்புகளை அனுப்பினால் கூட அமெரிக்காவினால் நிக்கரகுவாவை வெற்றி கொள்ளமுடியாது.

இப்படி நிக்கரகுவா அதிபர் ஒடேகா அறிவித்தார்.

அதிபரின் ஆளும்கட்சி தோன்றிய 25 ஆவது வருட நிறைவு தினத்தை ஒட்டி நடந்தபிரமாண்டமான இராணுவ அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டு பேசுகையில் அவர் மேற்கண்டவாறு சொன்னார்.

ரஷ்யாவில் உற்பத்தி செய்யப்பட்ட பல நவீன ரக ஆயுதங்கள், கவச வாகனங்களின் அணிவகுப்பும் இடம் பெற்றன. (இ-எ)

## சீக்கியரால் சுட்டுக் கொலை

புதுடில்லி, நவ. 9

பஞ்சாப்பின் பழம் பெரும் தேசிய வீரரான களிச்சான் சர்மா கடந்த வெள்ளிக்கிழமை சீக்கியத் தீவிரவாதிகளினால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அன்னாரின் மறைவு குறித்து ஜனாதிபதி ஜெயில் சிங் வருத்தம் தெரிவித்திருக்கின்றார்.

### சிரியாவுக்கு எதிரான நடவடிக்கை:

## ஐரோப்பிய பொருளாதார சமூக நாடுகள் முடிவு செய்யும்

டமஸ்கஸ், நவ. 9

லண்டன் விமான நிலையத்தில் விமானம் ஒன்றுக்கு குண்டு வைத்துத் தகர்க்க சிரிய ராஜதந்திரிகள் முயன்றதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக சிரியாவுக்கு எதிராக பொருளாதாரத் தடைகளைக் கொண்டு வருவது பற்றி இன்று திங்கட்கிழமை ஐரோப்பிய பொருளாதார சமூகத்தைச் சேர்ந்த நாடுகள் முடிவு செய்ய உள்ளன.

இதனிடையில் சிரியாவுக்கு எதிரான பொருளாதார, இராணுவ நிர்ப்பந்த நடவடிக்கைகளை சிரியா முறியடிக்கும் என்று சிரிய ஜனாதிபதி அஸாத் அறிவித்திருக்கிறார்.

சிரியாவுக்கு எதிரான போக்கைக் கடைப்பிடிக்கும் நடவடிக்கைகளை ஐரோப்பிய பொருளாதார சமூகம் எடுப்பது அரபு லீக், நாடுகள் மத்தியில் ஆத்திரத்தை ஏற்படுத்தியுள்ளது.

இது குறித்து அரபு லீக், ஐரோப்பிய பொருளாதார சமூகத்தை எச்சரித்துள்ளது.

வெடிகுண்டு முயற்சியைத் தொடர்ந்து பிரிட்டன் சிரியாவுடன் ராஜதந்திர உறவுகளை முறித்துக் கொண்டது தெரிந்ததே. (இ-எ)

### வெளி உலகில்

## கோடீஸ்வரராகவே இறந்தார் ஹிட்லர்!

பொன், நவ. 9

அடோல்ப் ஹிட்லர் ஒரு கோடிஸ்வரராகவே இறந்தார் என்று பிரபல ஜெர்மன் சரித்திர ஆராய்ச்சியாளர் அறிவித்திருக்கின்றார்.

வுல்ப் சுவன்வாலர் என்ற சரித்திர ஆராய்ச்சியாளர் தனது சுயசரிதையில் இதனைக் கூறியிருக்கிறார்.

மூதலாம் உலக மகா யுத்தத்துக்கு முன்னர் நிரந்தர வருமானம் இல்லாத சுயதொழில் மூலம் உழைக்கும் ஓவியராகவே ஹிட்லர் வாழ்ந்து வந்தார்.

30. 4. 1945 இல் தனது பேர்லின் அறையில் தற்கொலை செய்த சமயம் ஐரோப்பாவில் இருந்த கோடீஸ்வரர்களில் ஒருவராக ஹிட்லர் விளங்கினார்.

அடோல்ப் ஹிட்லர் எழுதிய மெயின்காம்ப் (எனது போராட்டம்) புத்தகத்தின் 1 கோடி பிரதிகள் விற்கப்பட்டன. 1933 இல் ஜெர்மன் தலைவராக வந்த பின்னர் ஆண்டு தோறும் 20 லட்சம் மார்க்குகள் வீதம் 12வருடம் உழைத்தார்.

இப்படி அந்தச் சுயசரிதையில் கூறப்பட்டுள்ளது. (இ-எ)

# ராஜீவ் கொலை முயற்சிக்கு முதல் நாளே அதுபற்றி பாகிஸ்தானில் பேசப்பட்டது

புதுடில்லி, நவ. 9

அண்மையில் காந்திஜி சமாதி அடியில் வைத்து பிரதமர் ராஜீவ் காந்தியைக் கொல்ல எடுக்கப்பட்ட முயற்சி பற்றி முதல் நாளே பாகிஸ்தானில் இதுபற்றிப் பேசப்பட்டதாம்.

இப்படித் தெரிவித்து இஸ்லாமாபாத்திலுள்ள இந்திய கொன்ஸல் ஜெனரல் அனுப்பிய கடிதம் ஒன்று இந்திய நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

அக்டோபர் 2 ஆம் திகதி காலை இக்கொலை முயற்சி நடந்தது. அக்டோபர் 1 ஆம் திகதியே இதுபற்றிய வதந்தி, பாகிஸ்தானில் அடிபட்டது.

இந்த விஷயத்தை இஸ்லாமாபாத்திலுள்ள இந்திய கொன்ஸல் ஜெனரல் தந்தி மூலம் அனுப்பினார்.

அத்தந்தி அக்டோபர் 2ஆம் திகதி மாலை தான் இந்திய வெளிவிவகார அமைச்சுக்குக் கிடைத்தது.

இப்படி நாடாளுமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

இந்திய கொன்ஸல் ஜெனரல் விஷயத்தை உடனடியாக அறிவிக்கத் தவறிவிட்டார் என்று எதிர்க்கட்சி உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் குறை கூறினர். (இ-எ)

## காரணமின்றி சிறையிலிடும் சட்டம் கைவிடப்பட்டது

மணிலா, நவ. 9

இராணுவச் சட்டத்தின் கீழ் அரசு எதிர்ப்பாளர்களைக் காரணமின்றி கைது செய்து சிறையில் இடும் விசேட அதிகாரங்களை பிலிப்பீன்ஸ் ஜனாதிபதி திருமதி கொரோஸன் அக்கியூனோ கைவிட்டார்.

பதவியில் இருந்த சமயம் முன்னாள் ஜனாதிபதி பெர்டினன்ட் மார்கோஸ் இந்த அதிகாரத்தைப் பாவித்து அரசு எதிர்ப்பாளர்களை சிறையில் அடைத்து வந்தார். (இ-எ)

## புகைத்தலுக்கு எதிராக சிங்கப்பூரில் இயக்கம்

சிங்கப்பூர், நவ. 9

புகைப்பதற்கு எதிராக பெரிய இயக்கம் ஒன்றை நடத்த சிங்கப்பூர் தீர்மானித்துள்ளது.

தொழில் நிலையங்களில் புகை பிடிக்கத் தடை செய்யப்பட்ட பகுதிகள் உருவாக்கப்படும் என்றும் இது மூன்றுமாத காலத்துக்கு முதலில் அமுல் நடத்தப்படும் என்றும் சிங்கப்பூர் சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

சினிமாத் தியேட்டர்களிலும் பஸ்களிலும் புகைபிடிப்பது ஏற்கனவே தடை செய்யப்பட்டுள்ளது. (இ-எ)

## ராஜீவ் எச்சரிக்கை

ஜம்மு, நவ. 9

இந்தியாவைப் பலவீனப்படுத்தமுயலும்வெளி நாட்டுச் சக்திகளுக்கு பிரதமர் ராஜீவ் காந்தி கடும் எச்சரிக்கைஒன்றை விடுத்தார்.

ஜம்மு-காஷ்மீரில் நடந்த பொதுக்கூட்டம் ஒன்றில் பேசுகையில் பிரதமர் இந்த எச்சரிக்கையை விடுத்தார்.

இந்தியா மூன்றுமுறை தாக்கப்பட்டது. மூன்று முறையும் இந்தியா தனது இறைமையையும் சுதந்திரத்தையும் பாதுகாத்தது.

எதிர்வரும் காலங்களிலும் அப்படியே செய்யும்.

இப்படி பிரதமர் சொன்னார்.

இக்கூட்டத்தை இந்திராகாங்கிரஸும் காஷ்மீர் தேசிய மாநாட்டுக் கட்சியும் கூட்டாக ஒழுங்கு செய்திருந்தன. (இ-எ)

## 'சார்க்' மாநாட்டை முன்னிட்டு பெங்களூரில் சினிமாப்பட விழா

பெங்களூர், நவம்பர் 9

'சார்க்' உச்சி மாநாட்டைத் தொடர்ந்து பெங்களூரில் ஏழு நாடுகளின் சினிமாப்பட விழா நடைபெறுகின்றது.

இந்தியா, இலங்கை, பங்களாதேஷ், பாகிஸ்தான், பூட்டான், நேபாளம், மாலைதீவு ஆகிய நாடுகளில் தயாரிக்கப்பட்ட 30 படங்கள் இவ்விழாவில் திரையிடப்பட உள்ளன. (இ-எ)



**பொய்யாமொழி**

குறள்:

மறத்தல் வெகுளியை யார்மாட்டும் தீய
பிறத்தல் அதனான் வரும்.

பொருள்:

யாரிடத்திலும் சினங்கொள்ளாமல் அதை மறந்து விட வேண்டும்; தீமையான விளைவுகள் அந்தச் சினத்தாலேயே ஏற்படும்.

# கரையோர மக்கள் வாழ்க்கை அவலங்களை யதார்த்தமாக எழுதுபவர் எழுத்தாளர் முருகபூபதிக்கு பாராட்டு

யாழ்ப்பாணம், நவ. 10

முற்போக்குச் சிந்தனையும், இளமைத்துடிப்பும், நல்ல முறையில் எதையாவது சாதிக்க வேண்டும் என்ற ஆர்வமும் உள்ள இளைஞர்களுள் நண்பர் லெ. முருகபூபதியும் ஒருவர். கரையோர மக்களின் வாழ்க்கை அவலங்களை மிகவும் யதார்த்தமாக அவர் எழுதுபவர்.

இவ்வாறு மல்லிகை ஆசிரியர் திரு. டொமினிக் ஜீவா கூறினார்.

நீர்கொழும்பைச் சேர்ந்த எழுத்தாளர் திரு. லெ. முருகபூபதி சோவியத் ரஷ்யாவில் நடைபெற்ற வாலிபர் மாநாட்டில் இலங்கை எழுத்தாளர்கள்— பத்திரிகையாளர்களின் பிரதிநிதியாகக் கலந்து கொண்டார்.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்க மாநாட்டிலும் கலந்து கொண்டார்—

இவற்றைப் பாராட்டி மல்லிகைப் பந்தலின் ஆதரவில் ஏற்பாடு செய்திருந்த நேநீர் விருந்தில் பேசுகையில் டொமினிக் ஜீவா மேற்கண்டவாறு கூறினார்.

முதுபெரும் எழுத்தாளர் திரு. தி. ச. வரதர் வைபவத்திற்குத் தலைமை வகித்துப் பேசுகையில்; ''தமது படைப்புக்களால் நீர்கொழும்பு மக்களைப் பிரதிபலித்த இவர் இப்போது எழுதாமல் இருப்பது கவலைக்குரியது. தமது பங்களிப்பைத் தொடர்ந்தும் செலுத்த வேண்டும்'' என்றார்.

திரு. நெல்லை க.பேரன் உட்பட மற்றும் பலர் பாராட்டுரைவழங்கினர்.

### நிதி ஒதுக்கீடு

கட்டப்பிராயில் உப மின்நிலையம் அமைப்பதற்கென யாழ் அபிவிருத்திச் சபையால் கோப்பாய் உப அலுவலக அபிவிருத்திச் சபைக்கு பத்து லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. (இ-10)

## தெல்லிப்பளை தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுச் சங்கம் இலாபத்தில்

பலாலி, நவ. 10

கடற்கரையை அண்டிய 1000 மீற்றர் வலயச் சட்டத்தினாலும், இராணுவ முகாமை அண்டிய 1000 மீற்றர் வலயச் சட்டத்தினாலும் தமது 10க்கும்மேற்பட்ட கிளைகள் இயங்காமல் இருந்ததனால் மிகப் பெரும் நஷ்டம் அடைந்த தெல்லிப்பளை தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம் அண்மைக் காலத்தில் இலாபமடையத் தொடங்கியுள்ளது.

நஷ்டமடைந்த காலத்தில் [illegible] களில் 33 பே[illegible] சேவைக் குறைப்புச் செய்தும், போத்தலின் அடைக்காவெனப் பெற்ற கள்ளுக்காக தொழிலாளர்களுக்கு வழங்கவேண்டிய 1 லட்சத்து 30 ஆயிரம் ரூபாவை நிலுவையாக வைத்திருந்தும் வந்த மேற்படி சங்கம் கடந்த 6 மாதங்களாக தொழிலாளர்களுக்கான நிலுவைகளை வழங்கியும், ஊழியர்கள் 12 பேரைத் திரும்பவும் வேலைக்கமர்த்தியும் உள்ளது.

சங்கத்திடமிருந்து மீதியாகவுள்ள கள்ளைப் பெற்று 'லோவைன்' [illegible] இற்கு அதற்குரிய பணத்தை வழங்கி, அங்கத்தவர்களுக்கு கூடியவருமானம் பெறக் காரணகர்த்தாக்களாக விருந்த இளைஞர் அமைப்பு ஒன்றிற்கு தொழிலாளர்கள் நன்றி தெரிவித்தினர். (இ-119)

## துர்க்கையம்பாள் தேவஸ்தானத்தில் கந்தஷஷ்டி

யாழ்ப்பாணம், நவ. 10

சாவகச்சேரி துர்க்கையம்பாள் தேவஸ்தான கந்த ஷஷ்டி விழா சிவஸ்ரீ க- பரராசசேகரக் குருக்கள் தலைமையில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

நூற்றுக்கணக்கான விரதாதிகள் விரதம் அநுஷ்டித்தனர். (இ)

## தொழிற் சங்க மறியல் போராட்டம்

கொழும்பு, நவ. 10

50சதவீத சம்பள உயர்வு கோரி மதிய போசனவேளையின்போது மறியல் இயக்கம் (பிக்கெட்டிங்) ஒன்றை இம்மாதம் 11 ஆம் திகதி நடந்த 21 தொழிற்சங்கங்கள் கூட்டணித் தீர்மானித்துள்ளது

காலி, மாத்தறை, குருநாகல், இரத்தினபுரி, கண்டி, கொழும்பு ஆகிய இடங்களில் இந்த ஒரு நாள் மறியல் இடம் பெறும்

குறைந்தது ஆயிரம் ரூபா சம்பளம்,

வழ்க்கைச் சுட்டெண் ஒவ்வொன்றுக்கும் ஐந்து ரூபா

1980 ஜூலை வேலை நிறுத்தத்தில் வேலை இழந்த அனைவருக்கும் மீண்டும் வாய்ப்பு வழங்கப்பட வேண்டும்,

மேற்கண்ட 3 கோரிக்கைகளையும்முன்வைத்தே இந்த மறியல் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (இ-எ)

### வாசகர் திருமுகம்

## அழுதுவடிகிறது ஒருவாய்க்கால்!

யாழ் மாநகரசபை எல்லைக்குட்பட்ட வீதிகளில் தண்ணீர் தேங்கி நின்று குழிகள் ஏற்படாது பார்த்துக்கொள்ளுமாறு ஆணையாளர் விடுத்திருக்கும் வேண்டுகோள் மிகவும் வரவேற்கத்தக்கது.

மழை தற்போது ஆரம்பித்துள்ளது. பெருமழை இனிப் பெய்யக் கூடும். இப்போதே மாநகரசபை வீதிகள் சில குன்றும் குழியுமாகக் காட்சி தருகின்றன.

இதனை இப்போதே திருத்த முன்வராவிட்டால் நாளடைவில் இவை பெரும் குழிகளாகி மக்களுக்குத் துன்பத்தையும், மாநகர சபைக்குப் பெருஞ் செலவையும் ஏற்படுத்திவிடும்.

ஒட்டுமடத்தடியில் ஒரு மரணப் பொறிக் கிடங்கினால் ஓர் உயிர் போன பின்னரும் யாழ் மாநகர சபை உஷாராக இருக்கத் தவறக்கூடாது.

யாழ் நகரில் பெருமாள் கோயில், பாடசாலை, பிள்ளையார் கோயில் என்பனவற்றிற்குத் தினமும் மக்கள் செல்லும் வீதியாக மணிக்கூட்டு வீதி விளங்குகின்றது.

இந்த வீதியின் மத்திய இடமொன்றில் சந்தி ஒன்று இருக்கிறது. இதற்கு அண்மையில் வடிகால் ஒன்று தினமும் அழுது வடிகின்றது.

இந்த வடிகாலுக்கு மேல் மூன்று கற்கள் கொங்கிறீற் கற்கள் வைக்கப்பட்டுள்ளன. அக்கற்கள் தற்போது சரியாக இல்லாததால் வாகனங்கள் போவதற்கு இடைஞ்சலாக இருப்பதுடன் பாதசாரிகளுக்கும் பெருநஷ்டம் ஏற்படுத்தி விடுகின்றன.

பகலில் இதனைக் கடந்து செல்வதே சிரமமாக இருக்கும்போது இரவில் இந்தப் பாதையால் போகும்போது மக்கள் விழுந்தெழும்ப வேண்டியுள்ளது.

இது தற்போது மிகுந்த ஆபத்தை ஏற்படுத்தும் வடிகாலாக இருப்பதால் இதனை யாழ் மாநகரசபையினர் உடனடியாகத் திருத்தவேண்டுமென்பதே இங்கு வசிப்போர் கருத்தாகக் காணப்படுகிறது.

இதனை ஒருமுறை ஆணையாளர் அவர்கள்நேரில் வந்து பார்ப்பாரானால் இதற்கு உடன் பரிகாரம் காண முன் வருவாரென்பதில் சந்தேகமில்லை.

ந. சிவபாதம்
யாழ்ப்பாணம்.

## வலது குறைந்த இளைஞர் பற்றித் தகவல் இல்லை

யாழ்ப்பாணம், நவ. 10

வவுனியாவில் ஆயுதப் படையினரால் கைது செய்யப்பட்ட வலது குறைந்த தமிழ் இளைஞர் ஒருவர் பற்றி வவுனியா மாவட்டப் பிரசைகள் குழுச் செயலாளர் டாக்டர் எஸ். வி. பரராஜசிங்கம் பாதுகாப்பு வட்டாரங்களுடன் தொடர்பு கொண்டிருக்கிறார்.

இளைஞனின் பெயர் சிதம்பரப்பிள்ளை நாக

(4-ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

BECON
DAY CLASS
87 A/L பிரிவு II

| | |
|---|---|
| பொருளியல் | திரு. வரதராஜன் |
| அளவையியல் | திரு. S. S. மனோகரன் |
| கணக்கியல் | திரு. மரியதாஸ், ராஜன் |
| வர்த்தகம் | திரு. ரட்ணம் |
| இந்து நாகரிகம் | திருமதி. அருள் நங்கை |
| தமிழ் | திரு. நாகேஸ்வரன் |
| புவியியல் | திரு. சண் |

ஆரம்பம் 12-11-86 புதன் 7-00 மணி

# உதயன்

10 - 11 - 1986 திங்கட்கிழமை

BECON
(ஸ்ரீதர் சினிமா முன்பாக)
யாழ்.
87 A/L Day Class

| | | |
|---|---|---|
| Maths | — | திரு. நல்லையா 9-00 |
| Physics | — | திரு. மணியம் 12-00 |
| Chemistry | — | திரு. சிவநாதன் |
| Botany | — | திரு. சர்வானந்தா |
| Zoology | — | திரு. செல்வா |

ஆரம்பம்: 12-11-86 9 மணி (புதன்)



யாழ் கோட்டை முகாம் பொறுப்பதிகாரி கேர்ணல் வீரசேகரா, தமிழீழ விடுதலைப் புலிகள் யாழ் மாவட்டத் தளபதி திரு. கிட்டுவுக்கு கைலாகு கொடுத்து விடைபெறும் காட்சி. கப்டன் கொத்தலாவலை திரும்பி நின்று புலிகளுடன் அளவளாவுகிறார். மேஜர் ஆரியரத்னவும் இடது கோடியில் காணப்படுகிறார்.

### தமிழ்ப் போராளிகள்

# நாட்டின் சட்ட திட்டங்களுக்கு மேலானவர்கள் அல்லர்

## எம். ஜி. ஆர். கூறுகிறார்

லண்டன், நவ. 9

தமிழ்ப் போராளிகள் எமது நாட்டின் சட்ட திட்டங்களுக்கு மேலானவர்கள் அல்லர். தமிழ்ப் போராளித் தலைவர்கள் கைதும். அவர்களிடம் இருந்து ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதும் இதனையே காட்டுகிறது.

இப்படி தமிழக முதல் அமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் தன்னிடம் தெரிவித்ததாக புதுடில்லியில் உள்ள பி. பி. சி. செய்தியாளர் மார்க் ரலி அறிவித்திருக்கின்றார்.

இத் தகவலை லண்டன் பி. பி. சி. வானொலி தனது நேற்றுக் காலை செய்தி அறிக்கையில் ஒலிபரப்பியது.

போராளி அமைப்புக்களின் சென்னை தலைமை அலுவலகங்கள், தமிழ் நாட்டில் தமிழ்ப் போராளிகள் தங்கியுள்ள இடங்கள் முதலியன சென்னைப் பொலீஸாரினால் முற்றுகையிடப் பட்டன.

பெருந்தொகையான நவீன ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன

நிலத்தில் இருந்து ஆகாயத்துக்கு விடப்படும் ஏவுகணைகள்,



ரொக்கட் லோஞ்சர்களும் அப்போது கைப்பற்றப்பட்டன.

இப்படி பி. பி. சி. வானொலி நேற்றுக்காலை அறிவித்தது.

### புதுடில்லியில்

இதற்கிடையில் தமிழ் நாட்டின் சட்ட". ஒழுங்கு பாதிக்கப்படுவதற்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கையே இது என்று நேற்று புதுடில்லியில் அதிகார பூர்வமாக அறிவிக்கப்பட்டது.

தமிழ்ப் போராளிக் குழுக்கள் மீது சென்னைப் பொலீஸார் எடுத்த நடவடிக்கை பற்றி மத்திய அரசு அதிகாரி இக் கருத்தைவெளியிட்டார்.

அவசியமேற்பட்டதால் மாநில அரசு இந்தநடவடிக்கையை எடுத்தது. மத்திய அரசுடைய ஆலோசனையின் மீது தான் மாநில அரசு இந்த நடவடிக்கையை எடுத்தது என்ற கேள்விக்கே இடமில்லை.

இப்படி அந்த அதிகாரி தெரிவித்தார்.

தமிழ் நாட்டில் தமிழ்ப் போராளிகளின் பயிற்சி முகாம்கள் இருக்கின்றன என்ற கூற்றை அந்த அதிகாரி மறுத்தார்.

(இ-எ)

## இ. காங்கிரஸ் தீர்மானம்

சென்னை, நவ. 9

இந்திய அரசு எடுக்கும் முயற்சிகளுக்கு இலங்கைத் தமிழ்ப் போராளி அமைப்புக்கள் ஆதரவு கொடுக்க வேண்டும்.

இப்படிக் கூறும் தீர்மானம் ஒன்றை இந்திரா காங்கிரஸ் தமிழ்நாடுக் கிளை நிறைவேற்றியுள்ளது. (இ-எ)

## விடுதலையான நபரின் பெயரும் பட்டியலில்

யாழ்ப்பாணம், நவ. 10

கைதிகள் பரிமாற்றத்திற்காகக் கைதான 19 விடுதலைப் புலிகளின் பெயர் பட்டியல் இராணுவம் சார்பில் நேற்றுப் புலிகளிடம் கொடுக்கப்பட்டது.

அதில் வல்வெட்டித் துறை வாசியான ஒருவரின் பெயரும் இடம் பெற்றிருந்தது.

இவர் 4 மாதங்களுக்கு முன் விசாரணையின் பின் விடுதலை செய்யப்பட்டு விட்டார் எனப் புலிகளால் இராணுவத் தரப்பிற்கு எடுத்துக் கூறப்பட்டது.

கப்டன் கொத்தலாவலை இத்தகவலைக் கேட்டு ஆச்சரியமடைந்து 'அப்படியா'? என்றார். (இ-5)

## இயங்க வைக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ. 10

யாழ்ப்பாணம் நவீன சந்தையில் உள்ள மக்கள் வங்கிக் கிளை தொடர்ந்தும் இயங்க வேண்டும் என வாடிக்கையாளர் பலர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த வங்கியில் கணக்கு வைத்திருக்கும் வர்த்தக பிரமுகர்கள் பலரும் இந்த வங்கிக்கிளை இயங்காததினால் பெரும் சிரமத்துக்குள்ளாகியுள்ளனர்.

இதனால் வர்த்தக சங்க பிரமுகர்களும் மற்றும் வாடிக்கையாளர்களும் இது தொடர்பாக உதவி பிராந்திய முகாமையாளர் திரு. வி. நடராஜா, திரு. வி. சிவசுப்பிரமணியம் ஆகியோரைச் சந்தித்து வங்கியை உடனடியாக திறப்பதற்கு ஆவன செய்யும்படி தெரிவித்தனர்.

தற்பொழுது கொழும்பிலிருக்கும் பிராந்திய முகாமையாளர் யாழ் வந்ததும் இந்த விஷயம் கவனிக்கப்படும் என உறுதி மொழி அளித்ததாக அறியவந்துள்ளது. (ஒ)

## இன்றைய உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம், நவ. 10

மாணவர் முன்னணி நடத்தும் உதைபந்தாட்டப் போட்டியில் இன்று திங்கட்கிழமை சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியும் மோதுகின்றன.

பிற்பகல்3.00 மணிக்கு இப்போட்டி ஆரம்பமாகும்.

4.00 மணிக்கு ஆரம்பமாகும் இரண்டாவது போட்டியில் இளவாலை சென்.ஹென்றீஸ் கல்லூரியும் சென். ஜோன்ஸ் கல்லூரியும் மோதுகின்றன.

இந்த இரு போட்டிகளும் இன்று சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறுகின்றன.

இன்றைய வலைபந்தாட்டப்போட்டிகள் கொக்குவில் இந்துக் கல்லூரித் திடலில் நடைபெறும். (விவரம் 2ஆம் பக்கத்தில்) (இ)

## நவம்பர் 15 போராட்ட நாள்

யாழ்ப்பாணம். நவ. 10

இந்நாட்டின் வருவாய்க்கு ஊற்றுக் கண்ணாகத் திகழ்கின்ற மலையகத் தோட்டத்தொழிலாளர்களுடைய அடிப்படை உரிமைகளில் ஒன்றாகிய பிரஜா உரிமையைப் பறித்த நவம்பர் 15ஆம் திகதியைப் போராட்ட நாளாகக் கொள்ளப்படும்.

இதனை முன்னிட்டு வட பகுதியில் பல்வேறு இடங்களில் பொதுக் கூட்டங்கள் நடத்தப்படும்.

தமிழ் பேசும் மக்கள் ஒடுக்கப்படுவதற்கு எதிரான போராட்டத்திற்கான இணைப்புக் குழு இவ்வாறு தீர்மானித்துள்ளது.

யாழ் மாவட்டத்தில் செயல்படுகின்ற வெகுஜன ஸ்தாபனங்களும் அமைப்புக்களும் இத்தினத்தை தமிழ் பேசும் மக்களுக்கெதிராக நடைமுறைப்படுத்தப்பட்ட முதல் பாரிய தாக்குதலாகக் கருதிச் செயற்படும்படியும் இணைப்புக் குழு வேண்டுகோள் விடுத்துள்ளது.

சகல இயக்கங்களின் ஒத்துழைப்பைக் கோருவதெனவும் தீர்மானிக்கப்பட்டது (இ)

## மாணவர் அமைப்புக் குழு கூடுகிறது

யாழ்ப்பாணம், நவ. 10

யாழ் பல்கலைக் கழக மாணவன் விஜிதரன் கடத்தப்பட்டதுதொடர்பாகச் சில முக்கிய தீர்மானங்களை எடுப்பதற்காக மாணவர் அமைப்புக் குழு இன்று கூடுகிறது.

கைலாசபதி கலையரங்கில் இன்று காலை 9.00 மணியளவில் பொதுக் கூட்டம் நடைபெறும்.

சகல மாணவர்களையும் இக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு மாணவர் அமைப்புக் குழு வேண்டுகோள் விடுத்துள்ளது. (இ-10)

## ஈரோஸ் அறிக்கை

யாழ்ப்பாணம், நவ. 10

யாழ். பல்கலைக்கழகத்தில் கல்வி கற்று வந்த வர்த்தக பீட மாணவனான, மட்டக்களப்பைச் சேர்ந்த விஜிதரன் தங்கியிருந்த வீட்டில் இருந்து காணமல்போய் இருப்பதாக வந்த பத்திரிகைச் செய்திகள் எம்மை வியப்பில் ஆழ்த்தி உள்ளன.

வேதனை தரும் இச் சம்பவமானது நெருக்கடிமிக்க ஈழவரின் விடுதலைப் போராட்ட கால கட்டத்தில் நிகழ்ந்திருப்பது மிகவும் துரதிஷ்டமானதும், வருத்தத்திற்குரியதும் ஆகும்.

பல இடர்பாடுகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய இத்தருணத்தில் இப்படியான சம்பவங்கள் விடுதலை இயக்கங்களுக்கு அபகீர்த்தியை உண்டு பண்ணும்.

இம் மாணவன் கடத்தப்பட்ட சம்பவத்துடன் எமது அமைப்புக்கு எந்த விதமான சம்பந்தமும் இல்லை

இப்படி ஈரோஸ்நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## விஜிதரன் விவகாரம்:

# அன்னையர் முன்னணி அதிர்ச்சி தெரிவிக்கிறது

யாழ்ப்பாணம், நவ. 10

யாழ் பல்கலைக்கழக வர்த்தகத்துறை 3 ஆம் வருட மாணவன் விஜிதரன் இம்மாதம் 4 ஆம் திகதி தொடக்கம் திடீரெனக் காணமற்போனது அன்னையர் முன்னணிக்கு அதிர்ச்சியையும் துன்பத்தையும் அளித்துள்ளது.

இப்படி அன்னையர் முன்னணி விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பைச் சேர்ந்த இம் மாணவன் யாழ்ப்பாணத்தில் காணமற்போனதும், இச்சம்பவம் குறித்து இதுவரை எவருக்கும் எதுவும் தெரியாமல் இருப்பதும் ஆச்சரியம் தருகிறது.

அத்துடன் தமிழ் மக்களிடையே பாதுகாப்பின்மையையும் அச்ச உணர்வையும் இது ஏற்படுத்துகிறது.

இம்மாணவனின் மர்ம மறைவு குறித்து சகல பொது ஸ்தாபனங்களையும், பொறுப்பு வாய்ந்த அமைப்புகளையும் அக்கறைகாட்டுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இப்படி அன்னையர் முன்னணி தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது. (இ)

## காணவில்லை

யாழ் சென் ஜோன்ஸ் மைதானத்தில் இருந்து 3. 15 மணி அளவில் எனது C 90 86 ஸ்ரீ 9675 இலக்கமுள்ள மோட்டார் சைக்கிளை சைக்கிள் பாதுகாப்பில் இருந்து காணவில்லை.

தயவுசெய்து கீழ் கண்ட விலாசத்தோடு தொடர்பு கொள்ளும்படி வேண்டுகின்றேன்.

D. ரவி, 25A, சென். செபஸ்ரியன் வீதி, குருநகர், யாழ்ப்பாணம்.

## விளையாட்டு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இங்கே போர் முனையில் காணக்கூடியதாக இருப்பதாகவும் அவர் சொன்னார்

சந்திப்பு ஒரு மகிழ்ச்சிகரமான நிகழ்வு என்றும் நாளை மீண்டும் வரவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (இ-5)

## மலிவு விற்பனை

கவுண்டர் மேசை — இரும்புக் கதிரைகள் — Megaphone Transister ஒலிபெருக்கி, மேடைத் தராசு — பேப்பர் வெட்டும் மெசின் Paper Cutting Machine இன்னும் பல உங்கள் தேவைகள் எவையானாலும் வாங்கவும் விற்கவும் தினமும் எம்மிடம் வாருங்கள் — ஏலவிற்பனை நிலையம் கோப்பாய்

## வலது குறைந்த....

(3-ம்பக்கத் தொடர்ச்சி)

மணி, வயது 31. நெடுங்கேணிக்கு அருகிலுள்ள வெடிவைத்தகல்லு என்னுமிடத்தில் தோட்டம் செய்து வந்தார். அங்கு வைத்தே அவரை ஆயுதப்படையினர் கைது செய்தனர்.

## விடுதலை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

லும் வரிசையாகச் செல்ல நடுவே கேர்ணல் வீரசூரியாவும் கப்டன் கொத்தலாவலையும் கோட்டை நோக்கிச் சென்றனர்.

### முதுகில் தட்டி உரையாடினர்

இதற்கு முன்னர் பேச்சுக்களை முடித்துக் கொண்டு வீதிக்கு வந்த கப்டன் கொத்தலாவலை, சில விடுதலைப் புலிப் போராளிகளை முதுகில் தட்டி உரையாடினார்.

பொதுமக்களுக்குக்கை அசைத்து நன்றியைத் தெரிவித்துக் கொண்டார். (இ-எ-5-10)

## விஜேயும்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

காவை அழைத்து வரும்படி நாம் கேட்டோம். கப்டன் கொத்தலாவலை, கேர்ணல் வீரசேகரா ஆகியோர் அதற்கு மறுப்புத் தெரிவித்துவிட்டனர்.

நாம் தனிப்பட்ட முறையில்தான் விஜய குமாரண துங்காவுக்கு அழைப்பு விடுக்கவேண்டும்.

இப்படி திரு. கிட்டு தெரிவித்தார்

தொலைத் தொடர்புகள் சீர்கெட்டிருப்பதால் விஜய குமாரணதுங்காவுடன் நேரடியாகப் பேச முடியாதிருப்பதாகவும் திரு. கிட்டு தெரிவித்தார். (இ-5-10)

## வீடியோ புளோசம்
### இன்றைய வெளியீடுகள்

புன்னகை மன்னன் (V. G. P.)
கமல், ரேவதி

கலைஞரின்
பாலைவன ரோஜாக்கள் (V. G. P.)
சத்தியராஜ், லக்ஷ்மி

தர்மதேவதை (தரமான பிரதி)
விஜயகாந்த், ராதிகா, பல்லவி, M.N. நம்பியார்
சரத்பாபு, ஜெய்கணேஷ், தேங்காய்,
Y. G. மகேந்திரன்

உங்கள் இல்லங்களில் நடைபெறும் திருமணம், பிறந்த நாள் விழாக்களுக்கு வீடியோ படம் பிடித்து மகிழ்ந்திட இன்றே நாடுங்கள்.

வீடியோ புளோசம்
30, சிவப்பிரகாசம் வீதி,
யாழ்ப்பாணம்.

# இராணுவ அதிகாரிகள்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ரட்ண, மேஜர் ஹத்துருசிங்க, சைக்கிளில் வந்த பொலீஸ்காரர் ஆகியோர் நடந்து வந்தனர்.

### அறிமுகம் செய்தார்

அவர்களை ரகீம் கைலாகு கொடுத்து வரவேற்றார். கொத்தலாவலை மற்றைய இருவரையும் ரகீமுக்கு அறிமுகப்படுத்திவைத்தார். மேலதிக சிப்பாய்கள் தங்களோடு உடன் வருவதற்கு ரகீமிடம் அனுமதி கேட்டனர் படையினர். புலிகள் சம்மதித்தவுடன் கோட்டைப் பக்கமிருந்து பத்துச் சிப்பாய்கள் சீருடையில் வீதியின் இரு பக்கமாக அணிவகுத்து வந்தனர்.

கப்டன் கொத்தலாவலையும், மேஜர் ஆனந்த வீரசேகராவையும், மேஜர் ஆரியரட்ணவையும் புலிகளிடம் ஒப்படைத்த மேஜர் ஹத்துருசிங்க மீண்டும் முகாம் நோக்கி திரும்பிச் சென்றார்.

வந்த இராணுவ அதிகாரிகள், சிப்பாய்களை கப்டன் கொத்தலாவலை பின்னர் புலிகள் பிரமுகர் ரகீமுக்கு அறிமுகஞ் செய்துவைத்தார்.

### கிட்டுவிடம் வந்தனர்

அதைத் தொடர்ந்து போராளிகள் புடைசூழ, சிப்பாய்கள் பவனியாக தளபதி கிட்டு நின்ற மில்க்பார் சந்திவரை வந்தனர்.

அவர்களை கிட்டு கைலாகு கொடுத்து வரவேற்றார் கிட்டுவை கொத்தலாவலை தம்முடன் வந்தவர்களுக்கு அறிமுகம் செய்து வைத்தார்.

ஆயிரக் கணக்கான பொது மக்கள் இந்த மெய்சிலிர்க்க வைக்கும் சம்பவத்தைப் பார்க்க குழுமிநின்றனர்.

### பேச்சுக்கு அழைத்தல்

மேஜர் ஆரியரட்ணவும் இரு சிப்பாய்களும் இராணுவ முகாமுக்கு திரும்ப; மற்றவர்களை தளபதி கிட்டு தம்முடன் வீடு ஒன்றுக்கு பேச்சு [illegible] அழைத்துச் சென்றார்.

தளபதி கிட்டுவும்; கப்டன் கொத்தலாவலையும் ஒரு காரிலும்; மேஜர் வீரசேகரா, போராளிகள் மற்றக் காரிலும்; சிப்பாய்கள், பத்திரிகையாளர்கள் வான்களிலும் பவனியாக வீடு ஒன்றுக்குச் சென்றனர்.

அந்தத் தனியார் வீட்டில் சுமார் 9.45 மணி முதல் 11 மணி வரை பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன.

புலிகள் தரப்பில் தளபதி கிட்டு, திரு. ரகீம் ஆகியோரும். இராணுவத் தரப்பில் கப்டன் கொத்தலாவலை, மேஜர் வீரசேகரா ஆகியோரும் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டனர்.

இச் சந்தர்ப்பத்தில்; அடம்பனில் கைதிகளாக பிடிபட்ட இரு படை வீரர்களும் அங்கே அழைத்து வரப்பட்டனர்.

### கைதியைத் தூக்கி வந்தார்

காலில் காயம் பட்டிருந்த கைதியான கே. எம். எச். பண்டாரவை விடுதலைப் புலிகள் போராளி ஒருவர் தமது கைகளிலே ஏந்தியவாறு தூக்கி வந்தார்.

மற்றக் கைதியான நிமால் பெர்ணண்டோ நடந்தே வந்தார்.

அவர்கள் இருவரும் கொத்தலாவலை. வீரசேகரா ஆகிய அதிகாரிகளுடனும் சக சிப்பாய்களுடனும் மகிழ்ச்சி பொங்கிப் பிரவாகிக்க அளவளாவினர்.

தமது விடுதலையின் நிச்சயத்தை கட்டியம் கூறும் இச் சந்திப்பையிட்டு மனம் பூரிப்படைந்தவர்களாக அவர்கள் காணப்பட்டனர்.

போராளிகளால் இராணுவத்தினருக்கு சிற்றுண்டிகளும்; குளிர் பானங்களும் வழங்கப்பட்டன.

### இராணுவத்தினருக்கு போராளிகள் காவல்

வீட்டின் உள்ளே இராணுவத்தினர் – போராளிகள் பேச்சுக்கள் நடைபெற்றுக் கொண்டிருந்த சமயம் வீட்டைச் சுற்றி விடுதலைப் புலிகள் நவீன ஆயுதங்களுடன் காவல் நின்றனர்.

இராணுவ அதிகாரிகள் புலிகள் தளபதி கிட்டுவுடனும் மற்றையோருடனும் பேசுகையில், 12 இராணுவ சிப்பாய்களும் நடப்பவற்றைப் பார்த்த வண்ணமிருந்தனர்.

### வீரசேகராவின் ஆசை

காலை பதினொரு மணிவரை நடைபெற்ற ஒரு மணி நேரப் பேச்சுவார்த்தைகளின் முடிவில் வெளியேவந்த கேர்ணல் வீரசேகர தமது உதைபந்தாட்டத்துறை நண்பரான படப்பிடிப்பாளர் தேவராஜனுடன் அளவளாவினார்.

தனது இன்னொரு உதைபந்தாட்ட நண்பரான பலாலி ஆசிரியர் பயிற்சி கலாசாலை முன்னாள் அதிபர் திரு. கனகலிங்கத்தை சந்திக்க விரும்புவதாகக் கிட்டுவிடம் தெரிவித்தார்.

அவரது ஆவலை பூர்த்தி செய்ய விரும்பிய தளபதி கிட்டு மீண்டும் அவர்களை வாகனப்பவனியாக ஆயுதந் தாங்கிய போராளிகளின் பாதுகாப்புடன் நீராவியடியில் உள்ள திரு. கனகலிங்கத்தின் இல்லத்திற்கு அழைத்துச் சென்றார்.

வீதிகளின் இருமருங்கிலும் பெருந்தொகையான மக்கள் இராணுவத்தினரைப் பார்ப்பதற்காக திரண்டு நின்றனர்.

திரு. கனகலிங்கம் இல்லத்திலிருந்து புறப்பட்டு போராளிகளும் இராணுவத்தினரும் சுமார் 11-30 மணியளவில் மில்க்பார் சந்தியை அடைந்தனர்.

### 'நாளை சந்திப்போம்'

"நாளை மீண்டும் சந்திப்போம்; மிகவும் சந்தோஷமான ஒரு சந்திப்பு இது" என்று கூறி கொத்தலாவலை கிட்டுவிடம் விடைபெற்றார்.

சிப்பாய்கள், போராளிகளுடனும், பொதுமக்களுடனும் கைகுலுக்கி விடைபெற்றனர்.

இராணுவத்தினரை ரகீம் வாடிவீட்டு சந்தி வரைச் சென்று வழியனுப்பி வைத்தார்.

பலசிப்பாய்கள் போராளிகளுடனும் பொதுமக்களுடனும் நின்று படமெடுத்துக் கொண்டனர். (அ-எ-5-10)

# புலிகளின் நிபந்தனை...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

தினரால் கைதுசெய்யப்பட்டுள்ள விடுதலைப் புலிகளில் 19 பேரின் பெயர்ப் பட்டியல் எம்மிடம் தரப்பட்டது.

விடுவிக்கப்பட வேண்டிய இரண்டு பேரின் பெயர்களை நாம் உடனே குறிப்பிட விரும்பவில்லை.

சிலசமயம் பேச்சுக்கள் தோல்வியில் முடிந்தால் பெயர் குறிப்பிடப்பட்ட இரண்டு போராளிகளுக்கும் ஏதும் கெடுதல் நிகழலாம்.

### 10 போராளிகள் பெயர் தெரிவு

இதனால் நாம் பத்துப் போராளிகளின் பெயர்களைத் தெரிவுசெய்து கொடுத்திருக்கிறோம்.

அவர்கள் நாளை(திங்கள்) கோட்டை முகாமுக்குக் கொண்டு வரப்படுவர்.

திங்கள் நடைபெறும் பேச்சுக்களில் 10 போராளிகளில் இரண்டு பேரின் பெயர்களை இராணுவத்துக்குத் தெரிவித்தவுடன் கைதிகள் பரிமாற்றம் இடம்பெறும்.

கைதிகள் பரிமாற்றத்திற்கான 3 நிபந்தனைகளை நாம் விதித்தோம். அவற்றை இராணுவ அதிகாரிகள் ஏற்றுச் சென்றிருக்கின்றனர்.

நாளை (திங்கள்) ஒரு வரலாற்று நிகழ்வு நிகழும் என்று நம்பலாம் – இப்படித் திரு. கிட்டு தெரிவித்தார்.

(அ-எ-5-10)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி, இரண்டாம் ஒழுங்கை 15 – ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி: 10 – 11 – 1986.

Printed and Published by Uthayan Publications (Private) Ltd, 15 Second Lane, Power House Road, JAFFNA.

Registered as a Newspaper at the General Post Office. Sri Lanka Under Number QJ 60: N 86

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org